பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 05 புதன்கிழமை 21.08.2024 | அதிர்வு 019


## புதிய அரசியல் கட்சிக்கான கலந்துரையாடல் ஆரம்பம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப் படுத்தும்

05



# அசிங்கம்!

## தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் திகாம்பரம் - வேலுகுமார் கைகலப்பு

மலையகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கொழும்பு தனியார் தொலைக்காட்சியொன்றின் விவாத நிகழ்ச்சியின் இடைநடுவில் கைகலப்பில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம் மற்றும் எம்.வேலுகுமார் ஆகியோருக்கு இடையிலேயே நேற்று கைகலப்பு ஏற்பட்டது.

05

## காஸ் சிலிண்டர் சின்னம் மீதான முறைப்பாடு அடிப்படையற்றது!

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு




“வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட சமையல் எரிவாயு

05




வடக்கு மீனவர்களுக்கு நன்கொடையாக வந்த சீன அரிசிப் பொதிகள் மீனவர் வீட்டு உலைகளில் அவிவதற்குப் பதிலாக அதிகம் கடைகளில் விற்பனையாவது தெரிய வருகிறது.

என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்தால் அந்த அரிசியை வைத்து சோறாக்க முடிவதில்லை என்று சினக்கின்றார்கள் அடுப்படிகளின் மகாராணிகள். கஞ்சிக்கும், புக்கைக்கும், சோறுக்கும் நடுவில் ஒரு களி வடிவத்தில் ஏதோ ஒரு வடிவத்தில் பதார்த்தம் உருவாவதாக அவர்கள் எரிச்சலுடன் குறிப்பிடுகின்றனர்.

ஒவ்வொன்றும்10 கிலோ கொண்ட இந்த அரிசி மூடைகளையும் வெளியே தாராளமாகக் கடைகளில் காணலாம்.

யாழ்ப்பாண கடைகளில் இப்போது இது கிடைக்கின்றது. ஆரம்பத்தில்

05




# வரிசை யுகத்தில் இருந்து நாட்டை மீட்டது இந்தியாவின் கடனுதவியே!

## ரணில் விக்கிரமசிங்க அல்லர் என்கிறார் மனோ கணேசன்

இலங்கை ரூபா பெறுமதியில், ஒரு லட்சத்து இருபதாயிரம் கோடி ரூபாவுக்கு நிகரான, 400 கோடி அமெரிக்கா டொலர் தொடர் கடன் நிதி உதவியை இந்திய அரசு தந்ததால்தான், பெட்ரோல், உணவு, காஸ், மருந்து வரிசைகள், மின்வெட்டுகள், உர தட்டுபாடு ஆகிய வற்றில் இருந்து எமது நாடு காப்பாற்ற பட்டது. இந்த உண்மையை மறைத்து ரணில் விக்கிரமசிங்க நரித்தனமாக பேசித் திரிகிறார்.

மாவனல்ல, ருவன்வெல்ல ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றிய தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறி உள்ளவை வருமாறு:–

இலங்கைக்கு இந்திய அரசின் தொடர் கடன் நிதி உதவி வழங்க வேண்டும் என இந்திய அரசு, 2021 ஆம் வருடம், டிசம்பர் மாதம், கொள்கை ரீதியாக முடிவு எடுத்தது. இவை ரணில் ஆட்சிக்கு வர முன்னர் தீர்மானிக்க பட்டவை. அதன் பிறகு, 2022 ஆம் வருட மே மாதம் பிரதமராகவும், ஜுலை மாதம் ஜனாதிபதியாகவும் ரணில் பதவிகளை ஏற்றார். ரணில் பதவிக்கு வந்து இவற்றைப் பயன்படுத்தினார். ரணில் பதவிக்கு வந்து சுய முயற்சியால் இவற்றைக் கொண்டு வரவில்லை. இந்த உதவிகள் இந்திய அரசு, இலங்கை மக்களுக்கு, இலங்கை நாட்டுக்கு வழங்கிய பெரும் உதவிகளாகும்.

இதனாலேயே, இந்நாட்டில் அத்தியாவசிய பொருள் வரிசைகள் நின்றன. மின் வெட்டு நின்றது. விவசாயத்துக்கு தேவையான உரம் கூட ஓமன் நாட்டில் இருந்து இந்திய கடனுதவி நிதி மூலம் பெற இந்திய அரசு அனுமதி தந்தது. இதுதான் உண்மை. இதை மறுக்க முடியுமா என சரடு விடுபவர்களுக்கும், உண்மை தெரியாமல் பேசி திரிபவர்களுக்கும் நான் சவால் விடுகிறேன் என,

இந்திய தேசம்தான், எமது நாட்டை காப்பாற்றியது என்ற அடிப்படை உண்மையை மறைத்து, தான் ஏதோ நாட்டை காப்பாற்றியவர் போல, போகும் இடமெல்லாம் ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார். இந்தப் பொய்யை அவரது புதிய, பழைய எடுபிடிகளும் கூறி வருகிறார்கள். நாட்டில் ஒரு தரப்பினர் உண்மை தெரியாமல் இதை நம்புகிறார்கள்.

இலங்கை ரூபா பெறுமதியில், ஒரு லட்சத்து இருபதாயிரம் கோடி ரூபாவுக்கு நிகரான, 400 கோடி அமெரிக்கா டொலர் தொடர் கடன் (ஜனெயைெ ஊசநனவை டுைநெ) நிதி உதவியை இந்திய ஒன்றிய அரசு எமது நாட்டுக்கு வழங்கியது. அதேபோல் 400 கோடி இலங்கை ரூபா பெறுமதியான உணவு பொருள்களை இந்திய தமிழ்நாடு மாநில அரசு எமக்குவழங்கியது. இவற்றால்தான்தான் எமது வரிசைகளில் நீங்கின. இவை ரணில் ஆட்சிக்கு வர முன் தீர்மானிக்க பட்டவை. இந்த உதவிகள் இந்திய அரசு, தமிழக அரசு, இலங்கை மக்களுக்கு, இலங்கை நாட்டுக்கு வழங்கிய பெரும் உதவிகளாகும். ரணில் பதவிக்கு வந்து அவற்றைப் பயன்படுத்தினார். ரணில் பதவிக்கு வந்து சுய முயற்சியால் இவற்றை கொண்டு வரவில்லை. ஆனால், இவை தனது சாதனைகள் என ரணில் வழமை போல் நரித்தனமாக கூறி வருகிறார். – என்றார்.





# இலங்கை மக்கள் தாம் தெரிவு செய்கின்ற எவருடனும் இணைந்து பணியாற்றத் தயார்

## இந்திய தூதுவர் தெரிவிப்பு

இலங்கை மக்கள் தெரிவுசெய்யும் எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா தயார் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கண்டியில் பௌத்தமத தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் தெரிவுகளை மதிப்பது குறித்த இந்தியாவின் உறுதிப்பாட்டையும், இரண்டு நாடுகளில் எவர் ஆட்சி செய்தாலும் வலுவான இருதரப்பு உறவுகளை பேணுவது குறித்த உறுதிப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மக்களே தெரிவு செய்யவேண்டியவர்கள். இலங்கை தீர்மானிக்கும், இலங்கை மக்கள் தீர்மானிக்கும் எதனையும் நாங்கள் மதிப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் தெரிவுசெய்யும் எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவோம், எங்கள் நட்பு என்பது அனைத்து இலங்கைக்கும், அனைத்து இலங்கையர்களிற்குமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், இதற்கு சில காலம் எடுக்கும், இது நீண்ட திட்டம், ஓரிருவருடத் திட்டம் இல்லை. எவ்வளவு காலம் நீடிக்கும் என தெரிவிக்க முடியாது. ஐந்து, ஆறு வருடங்கள் நீடிக்கலாம். இரு தரப்பும் இணைந்து பணியாற்றுவதிலேயே இது தங்கியுள்ளது. இதனை பரஸ்பர இணக்கப்பாட்டைப் புரிந்துணர்வுடனேயே முன்னெடுப்போம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# நட்டஈட்டில் மிகுதியை செலுத்தினார் மைத்திரி

ஏப்ரல் 21 தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எஞ்சிய 12 மில்லியன் ரூபாவை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்தியுள்ளார்.

மேற்படி தொகையைக் கடந்த 16 ஆம் திகதி செலுத்தியுள்ளார் என மைத்திரிபால சிறிசேனவின் சட்ட ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவின்படி, மொத்தமாக 100 மில்லியன் ரூபாவை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்தியுள்ளார்.

# கிண்ணியாவில் பாலத்தடியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

## நேற்று முன்னிரவில் சம்பவம்



கிண்ணியா பொலிஸ் பிரிக்குட்பட்ட, ஆலாங்கேணி பிரதேசத்தையும் பைசல் நகர் பிரதேசத்தையும் இணைக்கின்ற பாலத்தடியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


கிண்ணியா, மஹரூப் நகர், 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான முஹம்மது லெப்பை முபாரக் (60 வயது) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

நேற்று மாலை 5.00 மணிக்கு கடைக்கு செல்கிறார் என்ச் மனைவியிடம் கூறிவிட்டு, வந்தவர் என்று ஆரம்ப கட்ட விசாரணையின் போது தெரிய வந்திருப்பதாகவும், இரவு 7 மணி அளவில் சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் கிண்ணிய வைத்திய சாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


Vijaya Jewellery's
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
WOW! WING
MARKETING PARTNER
PRINT FAST
PROUDLY PRESENTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
East FM 102.7 தமிழ்
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest


Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஒவ்வொரு மூடையும் ஆயிரம் ரூபா என விற்பனையான இந்த அரிசி இப்போது மூடை 1300 ரூபா வரை உயர்ந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டுமின்றி யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் வரை சென்று கடந்த வாரம் ஒரு பெண்மணி 50 பக்கெட்டுகளை வாங்கி வந்து யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தும் அளவுக்கு சீன அரிசி வியாபாரம் களைகட்டி இருக்கின்றது.

சரி, சோறாக்க உதவாத அந்த அரிசியை பிறகு எதற்கு மக்கள் வாங்குகின்றார்கள்?

இந்த அரிசியை மாவாக்கி சாதாரண அரிசி மாவுடன் கலந்து விற்பதால் மாவிற்பனை கொடிகட்டி பறக்கின்றதாம்.....!

\+ + +

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலபே பகுதியில் தேடுதல் வேட்டை ஒன்றை முன்னெடுத்த பொலிஸாருக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

இரட்டை மாடி கொண்ட கட்டடமொன்றின் கீழ் தட்டில், குளுகுளு ஏசி அறையில், ஒரு கஞ்சாத் தோட்டம் செழிப்புற்று இருப்பதை பார்த்துஅவர்கள் அதிர்ந்து போனார்கள். அந்த மூடிய கட்டடத்துக்குள் 174 கஞ்சா செடிகள் கம்பீரமாக எழுந்திருக்கின்றன.

அதேசமயம் அங்கு கஞ்சாவை விற்பனைக்காக பொதி செய்து கொண்டிருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அங்கு பிடிபட்ட கஞ்சாவின் விற்பனை மதிப்பு 10 கோடி ரூபா எனத் தெரிய வருகின்றது.

23 மற்றும் 48 வயதுடைய இருவர் இதனை ஒட்டி கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் கடுவல மீதுவா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட விருந்தினர்.

மூடிய வீட்டில் ஏசி குளிரூட்டி அறையில் கஞ்சா உற்பத்தி ஆச்சரியம் தான்....!

## அசிங்கம்!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திகாம்பரம் (நுவரெலியா மாவட்டம்), வேலுகுமார் (கண்டி மாவட்டம்) ஆகியோர் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர்.

எனினும், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில், நேற்றைய விவாத நிகழ்ச்சியில் இவர்கள் இருவருக்கும் இடையில் இடம்பெற்ற கட்சி தாவல் தொடர்பான கருத்து மோதல் இறுதியில் கைகலப்பாக மாறியது.

வேலுகுமார் எம்.பி. மீது திகாம்பரம் எம்.பியே முதலில் தாக்குதல் நடத்தினார். பதிலுக்கு வேலுகுமார் எம்.பியும் திகாம்பரம் எம்.பி. மீது தாக்குதல் நடத்தினார். இந்தச் சம்பவம் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"திகாம்பரம் – வேலுகுமார் கைகலப்பு அசிங்கமான அரசியலின் வெளிப்பாடு. ஜனநாயக அரசியல் களத்தில் கருத்தியல் ரீதியாக மோத முடியாத இருவரின் இயலாமையே இது." – என்று புத்திஜீவிகள் சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## புதிய அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் எந்தவொரு தேர்தலுக்கும் இந்தப் புதிய அரசியல் கட்சியின் மூலம் வேட்பாளர்களை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புதிய அரசியல் கட்சிக்குப் பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கட்சிக்கான அரசமைப்பு ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டதால், அந்த அரசமைப்பின்படி செயற்படுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

## காஸ் சிலிண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிலிண்டர் குறித்து ஒரு தரப்பினர் முன்வைத்துள்ள முறைப்பாடு அடிப்படையற்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்துக்கும், ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, இந்த முறைப்பாட்டை ஏற்க முடியாது."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தபால் மூல வாக்களிப்புக்கு 7 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளார்கள். எதிர்வரும் 26 ஆம் திகதி வாக்களிப்பு அட்டைகள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விநியோகிக்கப்படும்.

செப்டெம்பர் 21 ஆம் திகதி வாக்கெடுப்புக்கான வாக்களிப்பு அட்டைகள் செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னம் குறித்து ஒரு தரப்பினர் தேர்தல்கள் ஆணைக் குழுவில் முறைப்பாடு அளித்துள்ளார்கள். இந்த முறைப்பாடு அடிப்படையற்றது. ஏனெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்துக்கு அமைவாகவே எரிவாயு சிலிண்டர் சின்னம் ஒரு தரப்பினருக்கு வழங்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் நபருக்கு சமையல் சிலிண்டர் சின்னம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்துக்கும், ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, இந்த முரண்பாட்டை நிராகரித்துள்ளோம்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்துக்கு அமைய வேட்பாளர் ஒருவர் வாக்காளர் ஒருவருக்கு எவ்வளவு செலவழிக்க வேண்டும் என்பது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து வேட்பாளர்களும் இந்தச் சட்டத்துக்கு அமையச் செயற்பட வேண்டும்.

வாக்கெடுப்பு நிறைவடைந்து 21 நாட்களுக்குள் வேட்பாளர் தேர்தல் கால செலவுகள் குறித்து உரிய ஆவணங்களை ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும். சட்டத்துக்கு முரணாகச் செயற்படும் வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றார்.





# உலகிலேயே மிக நீளமான முத்திரை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

கண்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலதா மாளிகை பெரஹராவை குறிக்கும் வகையில் தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட உலகில் மிக நீளமான நினைவு முத்திரை நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த முத்திரை 205 மில்லிமீற்றர் நீளமானது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தலதா மாளிகையின் பெரஹெராவை மதம் சார்ந்த ஆசியாவின் உயர் நிகழ்வாக உலகின் முன்பாக அடையாளப்படுத்துவதற்கான அரச அனுசரணையை வழங்குவதாக உறுதியளித்தார்.

பெரஹெராவை ஏற்பாடுச் செய்தமைக்காக சகலருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, அதனை தேசிய கலாசார நிகழ்வாக மாத்திரமின்றி, இலங்கையின் தனித்துவமான கலாசார அம்சமாக உலகுக்குக் கொண்டு செல்வதோடு, அதனைப் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியதும் அவசியமாகும் என்றும் குறிப்பிட்டார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நிலைப்பாடு என்ன?

ஒவ்வொரு தடவையும் ஜனாதிபதித் தேர்தல் என்றதும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றிய கோரிக்கை வருவதும், வேட்பாளர்கள் அனேகமானோர் அதற்கு வாக்குறுதி தருவதும், அதிகாரத்துக்கு வந்ததும் அதை அடியோடு மறந்து விடுவதும் வழமையான விவகாரம்தான். கடந்த முப்பது வருடங்களாக - இதற்கு முந்திய ஏழு ஜனாதிபதித் தேர்தல்களிலும் - தொடர்ந்து நடந்ததுதான் இது.

இந்தத் தேர்தலுக்கு மீண்டும் வந்து விட்டது.

இந்தத் தடவையும் சமூகத்தின் 83 பிரபல பிரஜைகளும், எட்டுப் பொது அமைப்புகளும் சேர்ந்து நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கக் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் அடுத்த நாடாளுமன்றத்தின் முதல் வருடத்திற்குள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு உறுதியாகவும் பகிரங்கமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்படுமாறு அவர்கள், அனைத்து வேட்பாளர்களையும் கோரியிருக்கின்றார்கள்.

“1978 அரசமைப்பின் 46 ஆண்டு கால அனுபவம், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை அது அறிமுகப்படுத்தப்பட்டமை தொடர்பான எந்த நோக்கத்தையும் எட்டவில்லை என்பதைக் காட்டுகிறது.

துரிதப்படுத்தப்பட்ட பேண்தகு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி, இன,மத நல்லிணக்கம், அரசியல் ஸ்திரத்தன்மை என்ற எந்த இலக்கும் எட்டப்படவில்லை.” - என்று அந்தக் கோரிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சியானது அபிவிருத்தியில் மிகக் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. அது, இன மோதலை துரிதப்படுத்துவதன் மூலமும், நமது அரசமைப்பை அடிக்கடி நெருக்கடிகளுக்கு ஆளாக்குவதன் மூலமும், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்குப் பதிலாக இந்த ஆட்சிமுறைமை அவற்றை மோசமடையவே செய்துள்ளது - என்று அவர்கள் விளக்குகின்றனர்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையானது இந்த விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்குகிறது. ஏனெனில் அதற்குப் பொறுப்புக்கூறல் கடப்பாடோ, பதிலளிக்க வேண்டிய பொறுப்பின் தன்மையோ இல்லை. அதனால் - அதன் மூலம், அது சர்வாதிகாரம், ஊழல் மற்றும் இயலாமை ஆகியவற்றுக்குத் தாராளமாக இடமளிக்கின்றது. - என்றும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஆயினும் இந்தக் கோரிக்கை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தரப்பிலிருந்து மட்டுமே இது வரை சாதகமான பதில் வந்திருக்கின்றது.

“ஜனாதிபதி தேர்தலில் நாம் வெற்றிபெறுவோம். நாடாளுமன்றத்தின் பலமும் கிடைக்கப்பெறும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, தேர்தல்முறை மாற்றம், நீதித்துறையை வலுப்படுத்தல், மக்களின் அடிப்படை உரிமைகள், கலாசார உரிமைகள், பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்ட புதிய அரசமைப்பை உருவாக்குவோம்.” - என ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்று பணிப்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது குறித்து சஜித் பிரேமதாஸ தாமே உறுதிமொழி தந்திருக்கின்றார்.

இது விடயத்தில் மற்றவர்களின் - மற்றைய வேட்பாளர்களின் - நிலைப்பாடு இனித்தான் அம்பலமாக வேண்டும்!



# இந்துக்கள் வாக்குக்காகவே முத்தமிழ் முருகன் மாநாடு

## எல்.முருகன் கூறுகின்றார்

"பா.ஜ.கவுக்கு ஆதரவாக இந்துக்களின் வாக்கு வங்கி மாறிவிடுமோ என்ற அச்சத்தில் தி.மு.க. இப்போது முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்துகிறது. தமிழகத்தில் மத்திய அரசின் முடிந்த திட்டங்களுக்கான அறிக்கைகள் அரசால் முறையாக சமர்ப்பிக்கப்படாததால் நிதி வழங்கப்படாமல் உள்ளது. அறிக்கைகள் அளித்தால் உடனடியாக நிதி வழங்கப்படும்."

– இவ்வாறு மத்திய இணையமைச்சர் எல்.முருகன் கூறியுள்ளார்.

பாளையங்கோட்டையில் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு தினத்தையொட்டி அவரது மணிமண்டபத்தில் உள்ள சிலைக்கு மத்திய இணையமைச்சர் முருகன் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு பிரதமர் மோடியின் உத்தரவின்பேரில் ஒண்டிவீரனுக்கு அஞ்சல் தலை வெளியிட்டு அவரை மத்திய அரசு பெருமைப்படுத்தியது. நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி கடந்த ஆண்டு முழுவதும் சுதந்திரத்துக்காக பாடுபட்டு போற்றப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்களை மத்திய அரசு கவுரவித்தது,"– என்றார்.

தி.மு.கவும் பா.ஜ.கவும் இணக்கம் காட்டுகிறதா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

"ஒரு நிகழ்ச்சியை வைத்து அதுபோன்று தீர்மானிக்க முடியாது. மாநில அரசின் சார்பில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் கலந்து கொண்டார். அது அரசியலுக்கு அப்பாற்பட்டது. அதை அரசியலாக பார்க்க கூடாது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு 11 லட்சம் கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. ஆளுநர் ஆண்டுதோறும் தேநீர் விருந்துக்கு அழைப்பது வழக்கம்தான். தி.மு.கவினர் இந்த ஆண்டு கலந்து கொண்டுள்ளனர்.

கந்தசஷ்டி கவசத்தை இழிவு படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி நாங்கள் வேல் யாத்திரையை நடத்தினோம். அதற்கு முருக பக்தர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. பா.ஜ.கவுக்கு ஆதரவாக இந்துக்களின் வாக்கு வங்கி மாறிவிடுமோ என்ற அச்சத்தில் தி.மு.க. இப்போது முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்துகிறது. மெட்ரோ ரயில் தொடர்பான பயன்பாட்டு அறிக்கை, தணிக்கை அறிக்கை போன்றவை தமிழக அரசு இதுவரை அளிக்கவில்லை. அந்த அறிக்கைகளை அளித்தால் உடனடியாக மெட்ரோ ரயில் திட்டத்துக்கு நிதி வழங்கப்படும்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை வன்மையாக கண்டிக்கிறேன். இந்த விவகாரத்தில் மாநில அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை பெற்றுத் தர வேண்டும். பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குவங்க மாநிலத்தில் மருத்துவர் மீதான பாலியல் வன்கொடுமை தாக்குதல் விவகாரத்தில் மாநில அரசால் நடவடிக்கை எடுக்க முடியாததாலேயே இப்போது சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

மருத்துவமனைகளில் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்களுக்கு எதிராக பாலியல் வன்கொடுமைகள் நிகழ்ந்தால் 6 மணி நேரத்துக்குள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அனைத்து மாநிலங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி வலுமையான கூட்டணியாக உள்ளது. தி.மு.கவின் உதவி தேவையில்லை." – என்றார்.

# கமல்ஹாசன் தலைமையில் ம.நீ.ம. செயற்குழு கூட்டம்



மக்கள் நீதி மய்யம் செயற்குழு கூட்டம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் நாளை மறுதினம் 23ஆம் திகதி சென்னையில் நடைபெறும் என அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ம.நீ.ம. பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் வெளியிட்ட அறிக்கையில்,

"மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் கட்சியின் நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி காலை 11 மணிக்கு சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், அனைத்து நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்சி நிர்வாகிகள் கூறும்போது,

"கூட்டத்தில் கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப் படும். கட்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கவுள்ளோம். குறிப்பாக வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலுக்கு கட்சியை தயார்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்களை கட்சித் தலைவர் வழங்கவிருக்கிறார்." – என்றனர்.



# பா.ஜ.கவின் கூட்டணிக்கு விஜய் வந்தால் ஏற்போம்

## அண்ணாமலை தெரிவிப்பு

பா.ஜ.கவின் மாமன் – மச்சான் கூட்டணிக்கு நடிகர் விஜய் வந்தால் ஏற்போம் என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

பல்லடம் அருள்புரத்தில் தனியார் அறக்கட்டளை சார்பில் மக்கள் மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு மையத்தின் கிளையை தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று திறந்து வைத்து, மரக்கன்றுகளை நட்டார். தொடர்ந்து பல்லடம் அருகே நாதகவுண்டன்பாளையத்தில் மறைந்த முன்னாள் எம்.எல்.ஏ.என்.எஸ்.பழனிச்சாமி நினைவு மண்டபத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“அத்திக்கடவு – அவிநாசி திட்டம் முழுமையாக பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தி வந்தோம். தற்போது அந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இது விவசாயிகளுக்கான வெற்றி. பா.ஜ.க. அணில் போல் வேலை செய்துள்ளோம். அத்திக்கடவு – அவிநாசி 2 ஆவது திட்டத்தை துவங்க வேண்டும். ஆனைமலை நல்லாறு திட்டம் மற்றும் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தையும் கொண்டுவர அரசு தீவிரம் காட்ட வேண்டும்.

ஆளுநருக்கும், முதல்வருக்கும் இடையில் நான் தரகர் என பழனிசாமி கூறுகிறார். கள்ள உறவு என்று கொச்சையான வார்த்தையை தெரிவித்துள்ளார். ஒரு முதிர்ச்சியான அரசியல்வாதி போன்று, அவரது பேச்சு இல்லை. பா.ஜ.க. கூட்டணி மாமன், மச்சான் கூட்டணியாக உள்ளது. இந்த கூட்டணிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். அ.தி.மு.க, திமுக பாஜக பங்காளிகள் தான். எந்த பங்காளியுடனும் சேரப்போவதில்லை. எங்கள் தலைமையில் மாமன் – மச்சான் கூட்டணி வேற்றுமையில் ஒற்றுமையாகும். நடிகர் விஜயும் மாமன் – மச்சான் தான். அவர் மாமன் – மச்சான் கூட்டணிக்கு வந்தால் ஏற்போம்.”– என்றார்.





# பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்கவே தாக்குதல்

## உக்ரைனின் அறிவிப்பு

ரஷ்ய படைகளின் எல்லை தாண்டிய தாக்குதல்களை தடுக்க, ஒரு பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவாக்குவதற்காகவே இந்த தாக்குதல் என முதன்முறையாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி திடீரென உக்ரைன் இராணுவம் எல்லையில் ரஷ்ய பகுதியான குர்ஸ்க் பிராந்தியத்தில் நுழைந்தது.

அதன் போது, சுமார் 70 குடியிருப்பு பகுதிகளை சுற்றி வளைக்கப்பட்டதுடன், அப்பகுதியில் உள்ள இரண்டு பாலங்களை தகர்த்து ரஷ்ய படைகளுக்கு அதிர்ச்சி அளித்தது.

இந்த நிலையில் உக்ரைன் ஜனாதிபதி கருத்து தெரிவிக்கையில்,

“தற்போது ஒட்டுமொத்த தற்காப்பு நடவடிக்கைதான் எங்களது முதன்மையான பணியாகும்.முடிந்தவரை ரஷ்ய போர் திறனை அழித்து அதிகபட்ச எதிர்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது.

உக்ரைனுக்கு எல்லையில் பாதுகாப்பு மண்டலம் தேவை. பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவதே எங்கள் இலக்கு.” – என்றார்.

உக்ரைனின் இந்த ஊடுருவலை சற்றும் எதிர்பார்க்காத ரஷ்ய படைகள், தங்கள் பகுதியை தற்காத்துக்கொள்ளும் முயற்சியில் பதில் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இந்த பதற்றத்துக்கு மத்தியில், குர்ஸ்க் பிராந்தியத்தில் மேலும் ஒரு பாலத்தை உக்ரைன் தகர்த்ததாக ரஷ்யா அறிவித்துள்ளது.













# சீனாவில் சூறாவளி 50 பேர் உயிரிழப்பு

சீனாவில் ஏற்பட்ட கேமி சூறாவளியினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கேமி சூறாவளி காரணமாக சீனாவில் /ஹுனான் மாகாணத்தில் உள்ள ஜிசிங் நகரில் கனமழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கான இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் 1,700 இற்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

சூறாவளியின் எதிரொலியாக கனமழையும் கொட்டித் தீர்க்க, மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன், 23 ஆயிரத்து 419 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அனர்த்தத்தினால் சிக்குண்டு இதுவரை 50 பேர் வரை உயிரிழந்துள்ளனர் எனவும், 15 பேர் காணாமற் போயுள்ளனர் எனவும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீட்புப் படையினர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முகாமிட்டு, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# கத்தரிக்கோல் காணாமல் போனதால் ஜப்பானில் 35 விமானங்கள் இரத்து

ஜப்பான் ஷின்-சிடோசே விமான நிலையத்தில் உள்ள கத்தரிக்கோல் ஒன்று காணாமல் போனதால் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

சுமார் 200 விமானச் சேவைகள் தாமதம் அடைந்துள்ளதுடன், ஏறக்குறைய 35 விமானச் சேவைகள் இரத்து செய்யப்பட்டன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் நூற்றுக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் நேரப்படி கடந்த 17ஆம் திகதி காலை 9 மணிக்கு கத்திரிக்கோல் ஒன்று காணாமல் போயுள்ளது. இதனைத் தொடர்ந்து பயணிகள் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், காணாமல்போன கத்தரிக்கோல் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.







# கூட்டுறவு கைத்தொழில்துறை பலப்படுத்தப்படும் என உறுதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கூட்டுறவு கைத்தொழில்துறை பலப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டுறவு கைத்தொழில் மற்றும் வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


“2019ஆம்ஆண்டுமுதல்எதிர்க் கட்சித்தலைவர் என்ற வகையில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளின் பலனாகக் கணிசமான அளவு வெற்றி கிடைத்தது.

தொடர்ச்சி▼













# கூட்டுறவு கைத்தொழில்துறை பலப்படுத்தப்படும் என உறுதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

தொடர்ச்சி▲


பரேட் சட்டத்தை ஒத்திவைத்து, பாதாளத்தில் விழுந்த சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்கள் மீண்டெழுவதற்கு வாய்ப்பு வழங்கியமை அவற்றில் முக்கியமான ஒன்றாகக் கருத முடியும்.

இந்த நிலையில், எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அந்தச் சட்டத்தை மீள அமுல்படுத்த வேண்டி ஏற்படும்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் பரேட் சட்டத்தை ஒத்திவைப்பதன் ஊடாக மக்களுக்குக் கிடைக்கும் பலன்களைத் தொடர்ந்தும் வழங்குவதற்கான சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.” – என்றார்.

இதேவேளை, இந்த மாநாட்டின்போது, ஐக்கிய மக்கள் சக்திக்கும், 9 மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.











# பிரசார செலவு வரம்பை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

தேர்தல் பிரசார செலவு வரம்பை மீறும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், எந்தவொரு விதி மீறல்களையும் பொலிஸாருக்கு அறிவிப்பதற்கான உரிமை பொதுமக்களுக்கு உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வாக்காளர் ஒருவருக்கு அதிகபட்சமாக 109 ரூபாவை மாத்திரம் செலவிட வேண்டும் என அறிவித்து நேற்றிரவு அதிவிசேட வர்த்தமானி வெளியானது.

மொத்த செலவினத்தில் 60 சதவீதத்தை நேரடியாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் செலவிட முடியும் எனவும், எஞ்சியுள்ள 40 சதவீதத்தை வேட்பாளரின் அரசியல் கட்சி அல்லது குழுவிற்கு ஒதுக்கீடு செய்ய முடியுமெனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தேர்தல் செலவு தொடர்பான அறிக்கையைத் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# வேட்பாளர் ஒருவர் வாக்காளருக்காக செலவிடக்கூடிய அதிகபட்ச தொகை

## அதிவிசேட வர்த்தமானி வெளியானது

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தமது பிரசார பணிகளின் போது, வாக்காளருக்காக செலவிடக் கூடிய அதிகபட்ச தொகையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தேர்தல் பிரசாரத்தின் போது ஒரு வாக்காளருக்காக வேட்பாளர் ஒருவர் 109 ரூபாவையே செலவிட முடியும் என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் வேட்பாளர்களுக்கிடையே இடம்பெற்ற




நிலையில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, வேட்பாளர் ஒருவரின் மொத்த செலவினமாக 186 கோடியே 82 லட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



# 4 சிறிய ரக மினி பஸ்களுக்கு வென்னபுவவில் தீ வைப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வென்னப்புவ ஏரி வீதியில் பழுது பார்ப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு சிறிய ரக மினி பஸ்கள் செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளதாகவும்,இதில் ஒரு மினி பஸ் முற்றாக எரிந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வென்னப் புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டு. பெண்டுகள்சேனை பிரதான வீதியில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் பலி





(பழுவூரான்)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுட்பட்ட பொண்டுகள்சேனை பிரதான வீதியில் வைத்து காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளார்.

கிரான் புலி பாய்ந்தகல் பகுதியைச் சேர்ந்த தம்பிபிள்ளை அம்பிகைராசா (வயது – 60) மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்து பூலாக்காடு பகுதியிலுள்ள கோயிலுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை சைக்கிளில் சென்ற வேளையில் பனை மரத்தின் மறைவில் நின்ற காட்டு யானை தாக்கியதில் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கோரளைப்பற்று தெற்கு கிரான் பகுதிக்குரிய திடீர் மரண விசாரணை அதிகாரி கே.பவளகேசன் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை பார்வையிட்டமையுடன், பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்றய் செவ்வாய்க் கிழமை சடலம் மீதான சட்ட வைத்திய பரிசோதனை நிறைவடைந்ததையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் இம்மாதம் இரண்டு குடும்பஸ்தர்கள் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு!

ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள மண்சரிவு தொடர்பான சிவப்பு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு, காலி, கேகாலை, நுவரெலியா மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையும் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தென், வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# வவுனியாவில் ஐஸ் போதைப் பொருள் பாவித்த 12 வயது மாணவன் வைத்தியசாலையில் சேர்ப்பு

**(வவுனியா நிருபர்)**

வவுனியா நகரையண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் ஐஸ் போதைப் பொருள் பாவித்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல் நிலை தேறி வருவதாக பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் பாடசாலைக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றின் அருகில் இருந்த ஒதுக்கு புறமான இடம் ஒன்றிற்கு சென்றுவிட்டு மீண்டும் பாடசாலைக்குள் சென்றுள்ளார்.

சிறிது நேரத்தில் குறித்த மாணவன் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தமையால் பெற்றோருக்கு தெரியப்படுத்தி அவர்கள் ஊடாக வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மாணவன் தற்போது நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மாணவன் ஐஸ் போதைப் பொருளை



பாவித்ததன் காரணமாக இந்த அசம்பாவிதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த மாணவன் இந்து மதகுரு ஒருவரின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சுற்றுலாப் பயணிகள் விசா தொடர்பில் சட்ட மா அதிபரால் நகர்த்தல் பத்திரம்

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குவது தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

மேற்படி தீர்ப்பிற்கமைய மேற்கொள்ளப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மேலும் தெளிவுபடுத்திக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் சட்ட மா அதிபருடன் எதிர்வரும் தினங்களில் விசேட கலந்துரையாடல் முன்னெடுக்கப்படவுள்ளதாக வியானி குணதிலக கூறினார்.

இது தொடர்பில் சட்ட மாஅதிபர் திணைக்களம் தகவல் வெளியிடுகையில், ஏற்பட்டுள்ள சில சிக்கல்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரத்தின் ஊடாக விடயங்களை முன்வைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் விசா சேவையை வழங்குதல் தொடர்பான செயற்பாட்டை இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானம் செயற்படுத்தப்படுவதைத் தடுத்து உயர் நீதிமன்றம் அண்மையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

அதற்கமைய கடந்த 2ஆம் திகதி இரவு முதல் அமுலாகும் வகையில் ஒன்லைன் முறையில் விசா வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்படுவதாக குடிவரவு – குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

அதற்கமைய நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் வழங்கப்படும் முயுசுஐஏயுடு விசா வழங்கும் நடவடிக்கை மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது.

# மன்னாரில் பட்டதாரி யுவதி மரணம் வைத்தியருக்குப் பணியிடை நீக்கம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரியராஜ் சிந்துஜா என்ற பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவரை பணியிடை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று மத்திய சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் குழந்தையைப் பிரசவித்த 27 வயதான மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரி பெண், அதிக குருதி போக்கு காரணமாகக் கடந்த மாதம் 28ஆம் திகதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

எவ்வாறாயினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வைத்தியர்கள் அவருக்குரிய முறையில் சிகிச்சையளிக்கவில்லை எனவும் வைத்தியர்களின் அசமந்த போக்கின் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைய ஏலவே, நான்கு பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு தாதியர்களுக்கும் இரண்டு குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இவ்வாறு பணியிடை நீக்கம் வழங்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவருக்கும் பணியிடை நீக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

எனினும் இதுவரையில், மேற்படி கடிதம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையைச் சென்றடையவில்லையென வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மரியராஜ் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் நேற்று மத்திய சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.





# தேவைப்பட்டால் ஆஸ்திரேலியக் குடியுரிமையை இழக்கத் தயார் என்கின்றார் திலகரட்ன டில்ஷான்

“சஜித் பிரேமதாஸவின் வேலைத் திட்டம் மற்றும் தொலைநோக்குப் பார்வையை மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்த பின்னர் அவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளேன்.”

– இவ்வாறு முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் திலகரட்ன டில்ஷான் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்று ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“எதிர்க்கட்சித் தலைவரைச் சுற்றி நல்ல அணி இருக்கின்றது. ஒரு நல்ல தலைவருக்கு நல்ல அணி தேவை.

நான் இரட்டைக் குடியுரிமை பெற்றவன். நாடாளுமன்றம் செல்ல வேண்டிய அவசியமில்லை. எவ்வாறாயினும், தேவை ஏற்பட்டால் தனது குடியுரிமையை விலக்கிக் கொள்ளத் தயார்.

விளையாட்டு அமைச்சர் பதவியையோ அல்லது எதையோ எதிர்பார்த்து எதிர்க்கட்சியில் இணையவில்லை.

பெரிய தியாகம் செய்து விட்டேன்.! என் பிள்ளைகள் அனைவரும் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்கள். கட்சி வேறுபாடின்றி நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று என் குழந்தைகளை விட்டுவிட்டுத்தான் வந்தேன்.” – என்றார்.

# இலங்கை மின்சார சபைக்கு 119 பில்லியன் ரூபா வருவாய்

இவ்வருடத்தின் முதல் அரையாண்டில் 119.20 பில்லியன் ரூபா (11,920 கோடி) இலாபத்தை ஈட்டியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பெற்ற 20.65 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 34.53 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது 67.2 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மின்சார சபையின் நிதி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# அசோக்க பிரியந்த ரணிலுடன் இணைவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தாம் ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த அறிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, அவர் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் கொழும்பில் நேற்று இடம்பெற்றுள்ளது.







# கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்திற்கான புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது!

இலங்கையின் எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கும் இந்தியாவின் பெட்ரோநெட் எல்.என்.ஜி நிறுவனத்துக்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய 'சொபாதனவி' மின் உற்பத்தி நிலையத்திற்காக, இயற்கை திரவ எரிவாயுவைச் சேமிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், எரிவாயு மீள் உருவாக்கம் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# இன்றைய ராசி பலன்கள் - 21.08.2024




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறு தலை பெற்றுத் தரும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக்கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவினர்களிடம் கலந்தாலோசித்து உங்கள் திருமணத்துக்காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.

பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும்.




இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.




இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் செயல்களை சீராக மேற்கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.




வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் சராசரிக்கும் அதிகமான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்துவீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம்படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிப்படையாக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். தூக்கமின்மை பாதிப்பு அல்லது தோல் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.08.2024

## தனுசு

எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

## மகரம்

இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கும்பம்

இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடு பாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மீனம்

இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர்பார்த்த படி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள். இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். குழந்தைகளின் ஆரோக்கியம் கவலை அளிக்கும். அவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.

